உ

சிவமயம்.

ஸ்ரீ உமையாம்பிகை துணை.

சந்தானமாலை.

இஃது

புதுவயல்

ஸ்ரீமான் வீர. கும.

குமரப்ப செட்டியார்

அவர்கட்குச்

சற்புத்திரப் பேறுகருதி

திருச்சாய்க்கோட்டை

ஸ்ரீ உமையாம்பிகையின்

திருவருளே முன்னிலைப்படுத்தி

மருங்காபுரி சமஸ்தான வித்வானும்,

பாரதமித்திரன் பத்திராதிபருமாகிய

ஸ்ரீமத் ஆ. சத்திவேற்பிள்ளை அவர்களால்

இயற்றி

கும்பகோணம்

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் பிரஸில் அச்சிடப்பெற்றது.

1926

1149

Q22.47
N26
49854

உ

சிவமயம்.

ஸ்ரீ உமையாம்பிகைதுணை.

சந்தானமாலை.

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

செல்வப் புதுவயல்வாழ் சீமான் குமரப்பச்
செல்வற்குப் புத்திரசெல் வஞ்சேரச்—சொல்லுமெழிற்
சந்தான மாலை தனக்கருளு மைந்துகரத்
தந்திவத நக்கடவு டான்.

நூல்.

கட்டளைக் கலித்துறை.

பூவிற் பொலிமங்கை மாரேவல் செய்யப் புவனமுற்று
மேவிப் பணிய வளமோங்கு சாக்கை விமலர்மகி
ழாவிக் கருமருந் தாமுமை யேயுன் னடிமறவாக்
கோவிற் குமரப்பற் காண்மகப் பேற்றைக் கொடுத்தருளே. (1)

கொடுக்கும் வளந்தனக் கேயுரித் தென்றல்செங் கோலரசை
யடுக்குங் கணவற் களித்தே தெரித்தரு ளம்மைவள
மடுக்கின்ற சாக்கை யரன்வாம மேவுமை மாமயிலே
வடுக்கண் டிலாக்கும ரப்பற்கு மைந்தன் வழங்குகவே. (2)

வழங்குங் கடைக்க ணருளா லடியர் தமைமருவும்
பழங்கண் டுடைக்கும் பரையே விரியொலிப் பல்லியங்கண்
முழங்கு மளகைப் பதிவீற் றருளு முமைமயிலே
தழங்கு மொழிமைந் தரைக்கும ரப்பற்குத் தந்தருளே. (3)

...ளத்தூரிப் போர்வையர் கொன்றையந் தாரினெடு
மந்தா கினியணி வேணியர் வீரை வனத்கர்பங்கி
னந்தா விளக்கி ளெளிருமை யேநவை நீங்குமெழிற்
சந்தான மோங்கு வளக்குமு ரப்பன் றனக்கருளே. (4)

தனமாத ரின்பந் தனைவெறுத் தாருளந் தங்கியவர்
மனமா சகற்று மணிவிளக் கேவள மார்ந்தவில்வ
வனமா தலத்துமை மாமயி லேதக்க மைந்தர்தமைக்
கனமா தனக்குமு ரப்பனும் ரோங்கக் கனித்தருளே. (5)

கணிகொண்ட வேதன் சிரம்பூண்ட சாக்கைமுக் கண்ணான்பிற்
பிணிகொண்ட வன்னப் பெடையே முதிர்சுவைப் பேரமிர்தே
மணிகொண்ட மேனி மயிலேல குமரப்பன் வாழ்விலங்க
வணிகொண்ட சற்புத் திரப்பேற்றை யன்பி னருளுவையே. (6)

அருளார்ந்த மேனி யணங்கே மறையி னகத்திலங்குந்
தெருளார்ந்த சோதித் திருவே யிருண்டு திரண்டடர்ந்த
சுருளார்ந்த வோதி யுமையே புதுவயற் ரொன்னகர்வாழ்
பொருளார்ந் திடுகும ரப்பற் கருள்புத் திரசெல்வமே. (7)

செல்வஞ் செறிமனை யானிறைந் தோங்கித் திகழ்புதுவை
நல்விற் பனர்பணி கொண்டேற்று நின்ரெளிர் நாயகியே
சொல்வஞ்ச மற்ரூர்க் கருளுமை யேமைந்தன் ரோன்றவரு
ளில்வந் தவர்மகி முவ்வாழ் குமரப்ப னின்புறவே. (8)

இன்பமுற் ரோருக் கருளள கைப்பதி யீசருளத்
தன்பிற் குறைவிட மாமணங் கேயைம் புலப்பகைவர்
துன்பந் துடைக்கு முமையாம் பிகாவுன் றனைமலர்த்தாட்
கன்பன் குமரப்பற் காண்மகப் பேற்றை யளித்தருளே. (9)

அளியார்ந் தொலிமலர்க் காவோங்கு வீரையா ரண்யமுறு
தளியார்ந் திலங்குநற் ரூயே யமரர் துயர்தவிர
வெளியாங்க வேல்வீ ரனைத்தந் தருளுமை யேயுளத்திற்
களியார்ந் திடக்குமு ரப்பற் குயர்கான் முளையருளே. (10)

கானத் தரக்குரீ யாடையர் வீரையங் கானகத்தர்
மானத் தரக்கர் புரமூறு கண்டசெவ் வாய்நகையர்
மோனத் தரக்க மணிவார் மகிழுமை யேயுயர்சந்
தானத் தரக்க மெனக்கும ரப்பற்குத் தந்தருளே. (11)

தந்தன்ன மன்ன நடையிடை யாயொளி சாலுமரை
இந்தன்ன வாணுத லாயுயர் சாக்கை யிடத்தமர்ந்த
நந்தன்ன கந்தர மாருமை யேகும ரப்பனெழின்
மைந்தன்ன லம்பெறத் தந்தா ளுதிரின் மனமகிழ்ந்தே. (13)

மனத்திற் கரிசற் றவர்போற்ற நின்ற வரதன்வில்வ
வனத்தன் மகிழப் பிரியாது வாம மருங்கமர்ந்த
கனத்திற் செறிந்த குழலுமை யேமகிழ் கான்மூலையைத்
தனத்திற் சிறந்த குமரப்ப வள்ள றனக்கருளே. (13)

தனக்கொன் றிலாத தனிப்பரன் சந்திரன் கங்கைதும்பை
வனக்கொன்றை வேணி யணியரன் வீரை வனத்தனன்பின்
மனக்கொன்ற நின்ற வுமையே புதுவயன் மாகர்வாழ்
கனக்கும் புகழ்க்கும ரப்பற்கு மைந்தர் கலையருளே. (14)

கலைகின்ற நீலோற் பலமல ரென்னத்தன் கண்ணிழலை
வலைகொண்ட கைக்கடை மங்கையர் கண்டு மயங்குசெந்நெல்
விளைகின்ற நீர்வயல் சூழ்சாக்கை மேவும் விமலையுன்னை
வளைகின்ற நற்கும ரப்பற்குப் புத்ரன் வழங்குவையே (15)

வையந் தணைப்படைத் துக்காத் தளிக்கின்ற மாண்புமிக்க
வையன் றனக்குய ராவியன் னுயள கைப்பதிக்கண்
மெய்யன்பர் போற்ற விளங்குமை யேயுனை மேவியன்பு
செய்யுங் குமரப்பற் கன்புற செய்கலைச் சேர்ப்பிப்பையே. (16)

சேர்ந்தன்பு கொண்டு பணிவோர்க் குறுதுயர் தீர்த்தருளு
மார்ந்தன்ன மென்னடை யாரணங் கேவீரை யாரணியஞ்
சார்ந்தன்பர் போற்றநின் னருளுமை யேதண வாதவன்பு
கூர்ந்தன்ப னுங்கும ரப்பற்கு மைந்தன் கொடுத்தருளே. (17)

கொடுத்தா தரிப்பவர் பாலென்று மேகுறை யாதசெல்வ
மடுத்தா தரிக்கும் வரிவிழியாய் வில்வ மாவனத்தை
யடுத்தா தரிப்பார் கருளுமை யேகும ரப்பனன்பி
னெடுத்தா தரித்து மகிழ்புத்ர செல்வத்தை யீந்தருளே. (18)

ஈன்றே ழிரண்டுல குங்காத்து நிற்கு மிறை வியென்றுந்
தோன்றுத் துணையா யிருந்தடி யார்க்கருள் சூழ்ந்துசெய்யுங்
கான்ற ரணியுமை யம்பிகை யேதக்க கான்முளையை
ஈன்றே குமரப்ப னென்றென்றும் வாழ வினிதருளே. (19)

இனிக்குங் குழலி னெழின்மொழி யாயடி யேத்துமன்பர்
பணிக்குந் துயரம் பரிந்துநிற் றுற்றுநற் பண்புடையாய்
தொனிக்கு முழுவ மதிர்சாக்கை மேவுமை சுந்தரியே
செனிக்க மதலை குமரப்பற் கேயருள் செய்குவையே. (20)

செய்யார்ந்த சாக்கை யுறைவீர சேகரச் செல்வர்மகிழ்
நெய்யார்ந்த பூங்குழ னேரிழை யேயொளிர் நீறகண்டி
மெய்யார்ந்த வர்க்கருள் செய்யுமை யேயுன் விரைமலர்த்தா
ளெய்யார்ந்த வன்ப னுங்கும ரப்பற் கருண்மகவே. (21)

அருவா யுருவா யருவுரு வாகி யகிலமெல்லா
மருவா ரணங்கே மலையர யன்புரி மாதவத்தின்
றிருவே யளகைத் திருப்பதி மேவுமை யேசிறந்த
வருவார் மகவளித் தாள்கும ரப்பனை யுள்ளுவந்தே. (22)

உள்ளந் தனிற்கறை யற்று ருளத்தி லுயர்ந்தவின்ப
வெள்ளம் பெருக்கி விளங்குமை யேகங்கை மேவுசடை
வள்ளன் மகிழ வளர்சாக்கை வாழ்ந்தருண் மாமணியே
தெள்ளும் மழலைச் சிரூர்கும ரப்பற்குச் சேர்ப்பிப்பையே. (23)

சேருந் திருவள வன்பிணி யோடுளத் தின்மருவுங்
கூருந் துயரு மகற்றிநின் ருண்டருள் கோமளவிண்
ணீரும் பிறையு மணிவா ரிடந்தனி னின்ருளிர்கச்
சாருந் தனத்துமை யேகும ரப்பற் கருண்மகவே. (24)

அருளொன்று மேனியர் வீரை வனேசுர ரண்பருக்கு
விருளொன்று கண்டடர் விளங்கிழை பாகர்வெள் ளெருதுடையார்
தெருளொன்று சிந்தை யிடங்கொண்டு வாழுமை யேசிறந்த
பொருளொன் றறுங்கும ரப்பற்கு நல்குவை புத்திரனே. (25)

புத்தநந் தித்தலை தூள்படப் பேரிடி போக்கியசீர்
வித்தகப் பிள்ளை தமிழ்ப்பாடல் கண்டருள் வீரைவனப்
பித்தர்தம் பாகம் பிரியா துறையுமை யேபிறங்கு
முத்தம னுங்கும ரப்பற்குப் புத்ர னுறவருளே. (26)

உற்றூர் மகிழ வருள்வீரை மாவனத் துத்தமர்நூல்
கற்றூர் தொழுங்கழற் கண்ணுதற் புண்ணியர் காதலிசை
முற்று தொளிரு முகிண்முலை யேமைந்தன் முல்லைமலர்
நற்று ணிகும ரப்பற் கிரங்கிநீ நன்கருளே. (27)

நன்றூர்ந்த வுள்ள வனவேட னுக்கு நயந்தருளுங்
குன்றூர்ந்த விற்கை யரனெரு பங்குடைக் கொற்றவைசீர்
நின்றூர்ந்த சாக்கை நிலவுமை யேமழ லேநிறைந்த
கன்றூர்ந்த வன்பன் குமரப்ப னுக்குட் கனிந்தருளே. (28)

கனித்தேன் வளமுறு காலோடிப் பாயக்கவின் கொள்செந்நெற்
றனித்தே விளையுந் தடம்பணை சூழ்தரு சாக்கையொளிர்
பனித்தே மொழியுமை யேகும ரப்பன் பரிவகல
வினித்தார் மழலை மொழிமைந்த ரீந்தரு ளின்புகொண்டே. (29)

இன்ப மடியார் தமக்கருள் சாக்கையி லேறிவர்வோர்
தன்பங் கமருந் தளிரியல் பூங்கொடி தாழ்ந்துதுதி
யன்பன் விழிக ளருளுமை யேகும ரப்பனுக்குப்
பொன்பங் கயமுகப் புத்திர செல்வத்தைப் பூப்பிப்பையே. (30)

வாழி விருத்தம்.

சீர்பூத்த வீரைவனத் திலங்கு கின்ற
சிவம்பூத்த மதிமௌலிப் பெருமான் வாழி
வர்பூத்த வுமையம்மை வாழி கண்டி
பெழினீறு பூனயடிய ரெவரும் வாழி
பார்பூத்த சிவசமயம் வாழி யின்பம்
பயக்குபஞ்சாக் கரம்வாழி பனிமென் முல்லைத்
தார்பூத்த தனவணிகர் வாழி செல்வந்
தருசந்தா னம்மாலை தழைத்து வாழி.